முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 990

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.06.2022, புதன்கிழமை

1. வரம் பெற்று வந்த ஞானியே
வள்ளலாய் வாழும் தவசியே
தரமான ஞான சமூகம் படைத்து
தரணியை ஞான யுகமாக மாற்ற வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
ஆசி தனை சுபகிருது மிதுன திங்கள்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் முதல் நாள், 15.06.2022 புதன்கிழமை)
அரங்கன் பலம்பெற எடுத்துரைப்பேன்
3. வாசி வென்ற ஞானவான்கள் படையை
வையகத்தில் எங்கும் நிரப்பி
நிரப்பி உலகோரை ஞானிகளாக்கி
நிலவுலகையே ஞானலோகமாக மாற்ற வந்த
4. வந்தநல் தவசியே உந்தன் நோக்கம்
வையகத்தில் வடிவேலன் என் சூட்சும சக்தியால் நிறைவேறும்
சிந்தைபட உன்னை அறிந்த மக்களெல்லாம்
சேவைவழி உன்னோடு தொடர்புகொண்ட மக்கள் அனைவருமே
5. ஐயமற முருகப்பெருமான் என்னருளால்
அனைவரும் பெரும்பேறு கண்டு உயர நேரும்
நேர்மைபட அரங்கன் உன் தர்மத்தையும் உன் ஞானத்தையும்
நிலவுலகில் சக்தியாக ஏற்ற மக்களெல்லாம்
6. வருமுலகில் பேரிடர்கள் சகல இன்னல்களை வென்று
வாசிவசம் யோகங்களும் கூடி
கூடியே அனைவரும் ஞானியாவர்
குருஅரங்கன் உன்னால் ஞான ஆட்சிக்காலமும் உருவாகும்
7. ஆகவே அதற்குகந்த அற்புதமான ஆற்றல்களை
அரங்கனுக்கு ஆறுமுகன் யான்
வரமென நித்தம்நித்தம் சக்தியாக வழங்கிவர
வள்ளலே நீ வந்த நோக்கம் இனிதே நிறைவேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–